**மீரிகம பிரதேச சபை**
**கம்பஹா மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 ஏப்ரல் 08 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2019 யூன் 30 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 செப்டம்பர் 12 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர, மீரிகம பிரதேச சபையின் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | தலைமை அலுவலகத்தை விரிவுபடுத்துவதற்காக ரூபா 530,026 மூலதனச் செலவினமும் நில்திய செவன சனசமூக நிலைய நிர்மாணத்திற்கான ரூபா 485,322 செலவினமும் காணி மற்றும் கட்டிடம் கணக்கில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | சரியான பெறுமதி கணக்கிடப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்று தயாரிப்பின் போது திருத்தப்படும். |
| (ii) | மோட்டார் வாகனங்களதும் வண்டிகளதும் ரூபா 104,769,917 காணி மற்றும் கட்டிடக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | சரியான பெறுமதி கணக்கிடப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்று தயாரிப்பின் போது திருத்தப்படும். |
| (iii) | இயந்திரங்களும் உபகரணங்களும் கணக்கில் பேரின் இயந்திரத்தின் பெறுமதியாக ரூபா 32,500 இருமுறை குறித்துக் கொள்ளப்பட்டிருந்தது. | சரியான பெறுமதி கணக்கிடப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்று தயாரிப்பின் போது திருத்தப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | ஒப்படைப்புக் கட்டண மற்றும் கடிதங்களின் மூலம் பெற்ற 09 காணிகளது பெறுமதியாகிய ரூபா 3,167,377 மற்றும் ரூபா 119,059,633 மேலதிகப் பெறுமதியும் காணி மற்றும் கட்டிடக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தன. முன்னைய ஆண்டில் கணக்கிலிருந்து அகற்றப்பட்ட ரூபா 13,349,430 பெறுமதியும் கணக்கிலிருந்து இருமுறை அகற்றப்பட்டிருந்தது. | சரியான பெறுமதி கணக்கிலிடப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் திருத்தம் செய்யப்படும். |
| (v) | மீளாய்வாண்டினது ரூபா 2,385,000 சம்பள மீளளிப்பு மற்றும் சொத்துக் கடன் வட்டி ரூபா 277,362 என்பன மூலதன வருவாய் நிலுவைக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தன. | சம்பள மீளளிப்பும் சொத்துக் கடன் வட்டியும் வெவ்வேறாகக் கணிப்பிடப்பட வேண்டும். | அந்த 2 கணக்குகளினதும் மீதிகள்2019 ஆம் ஆண்டில் முன்கொண்டு செல்லப்பட்டுள்ளன. |
| (vii) | மீளாய்வாண்டில் நன்கொடையாகப் பெறப்பட்ட ரூபா 251,674 ஆயுர்வேத மருந்துக் கையிருப்பு கணக்கிலிடப்படவில்லை. | நன்கொடையாகக் கணக்கிலிடப்பட வேண்டும். | பெறப்பட்ட ஆயுர்வேத மருந்துக் கையிருப்பு பிழையின்றிக் கணக்கிலிடப்பட்டுள்ளது. |
| (viii) | இறுதிக் கணக்குகளின் பிரகாரம் 06 கணக்கீட்டு மீதிகளுக்கும் உப பதிவேட்டு மீதிகளுக்குமிடையே ரூபா 131,682,956 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | வித்தியாசம் இணக்கம் செய்யப்பட்டுத் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும். | கணக்குகளுக்கும் உப பதிவேடுகளுக்கு மிடையே வித்தியாசம் ஏற்படாதவாறு திருத்தம் செய்யப்படும். |

## 1.4 பெற வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 06 ஆண்டுகளைக் கடந்திருந்த இனங்காணப்படாத ரூபா 21,429,518 கடன் மீதிகள் மற்றும் 05 ஆண்டுகளைக் கடந்த ரூபா 2,165,538 கடன் மீதிகள் என்பன தீர்வு செய்யப்படாதிருந்தன. | கொடுப்பனவு செய்ய வேண்டிய மீதியை தீர்வு செய்ய வேண்டும். | இயன்ற வரையில் தீர்வு செய்யப்படும். |

## 1.5 இணங்காமை

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | 1971 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங் களுக்கான விசேட ஏற்பாடுகள் அதிகாரச்சட்டம். | - | 2008 ஆம் ஆண்டின் பின்னர் 05 ஆண்டுகளுக்கு ஒரு முறையான தீர்வை விலைமதிப்புத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட வில்லை. | புதிய விலை மதிப்பீட்டின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2015 ஏப்ரல் 20 ஆந் திகதி மாவட்ட விலை மதிப்பீட்டாளருக்கு விண்ணப்பிக்கப் பட்டுள்ளது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 571 ஆம் நிதிப்பிரமாணம் | 26,949,249 | இரண்டு ஆண்டுகளைக் கடந்த வைப்புகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். | இரண்டு ஆண்டுகளைக் கடந்த வைப்புகளை இனங்கண்டு நிதிப் பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 21,943,365 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 19,448,237 ஆகும்.

### 2.2 வருவாய் நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், பட்டியலிடப்பட்ட வருவாய், சேகரிக்கப்பட்ட வருவாய் மற்றும் வருவாய் நிலுவை

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருவாய், பட்டியலிடப்பட்ட வருவாய், சேகரிக்கப்பட்ட வருவாய் மற்றும் நிலுவை வருவாய் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமானம் | 2018 மதிப்பிடப்பட்ட வருவாய் | பட்டியலிடப்பட்ட வருவாய் | சேகரிக்கப்பட்ட வருவாய் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2017 மதிப்பிடப்பட்ட வருவாய் | பட்டியலிடப்பட்ட வருவாய் | சேகரிக்கப்பட்ட வருவாய் | டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | தீர்வையும் வரியும் | 13,440,000 | 9,653,644 | 8,959,587 | 694,057 | 14,130,000 | 9,675,055 | 9,257,003 | 418,052 |
| (ii) | வாடகை | 23,110,000 | 25,286,804 | 22,964,510 | 2,322,294 | 15,895,000 | 14,946,236 | 14,523,136 | 423,099 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,163,350 | 1,082,950 | 1,082,950 | - | 1,896,100 | 1,238,600 | 1,238,600 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 267,245,850 | 1,808,253 | 1,812,253 | (3,999) | 221,894,000 | 1,018,058 | 1,017,768 | 290 |

### 2.2.2 தீர்வையும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறான தீர்வை நிலுவை காலப்பகுப்பாய்வின் படி 1-3 ஆண்டுகளான ரூபா 1,291,805, 3-5 ஆண்டுகளான ரூபா 388,882, 5 முதல் 10 ஆண்டுகளான ரூபா 2,566,921 மற்றும் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 574,662 என்பவற்றை சபை அறவிட வேண்டியிருந்தது. | தீர்வை நிலுவை வினைத்திறனுடன் அறவிடப்பட வேண்டும். | வெகுவிரைவில் அறவீடுகள் மேற்கொள்ளப்படும். |
| (ஆ) மீளாய்வாண்டினது மதிப்பிடப்பட்ட தீர்வை, வரி வருவாய் ரூபா 13,440,000 ஆகும். பட்டியலிடப்பட்டது ரூபா 69,653,644 ஆகும். சேகரிக்கப்பட்டது ரூபா 8,959,587 ஆகும். | வருவாய் நிலுவையை வினைத்திறனுடன் அறவிட வேண்டும். | பட்டியலிடப்பட்ட வருவாய்க்கு ஒப்பாக எதிர்காலத்தில் வரவு, செலவுத் திட்டம் தயாரிக்கப்படும். |

### 2.2.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டில் 1,729 வர்த்தக நிலையங்களுக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு பொதுச்சுகாதார பரிசோதகர் | அனுமதிப் பத்திரம் வினைத்திறனுடன் வழங்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அனுமதிப்பத்திரங்கள் தாமதமின்றிப் பெறப்படுவதற்கான |

| | | |
|---|---|---|
| அலுவலகத்திற்கு விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. இவற்றுள் அங்கீகரிக்கப்பட்டமை 1,426 மாத்திரமே. | | நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.2.4 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் போது 32 தொலைத்தொடர்புக் கோபுரங்களிலிருந்து ரூபா 96,000 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பணம் அறவிடப்படாத தொலைத்தொடர்புக் கோபுரங்களிலிருந்து பணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குறித்த தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ஆ) வர்த்தக அனுமதிப்பத்திரக் கூறுகளது எண்ணிக்கையைத் தவிர, ஏனைய வருவாய்த் தோற்றுவாயக் கூறுகளது எண்ணிக்கை 2016 ஆம் ஆண்டைவிட குறைந்திருந்தது. | வருவாய் தோற்றுவாய்களது கூறுகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும். | பரிசீலனை மேற்கொள்ளப்பட்டு தீர்வைக் கூறுகளது எண்ணிக்கை புதிய வர்த்தகம், சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களைப் பெற வேண்டிய நிறுவனங்களை அதிகரிப்பதற்கு எதிர்கால நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 30 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் ஆக்கப்பட வேண்டுமாயினும் 2018 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் 15 பணிகளுக்கு மாத்திரமே உப விதிகள் ஆக்கப்பட்டிருந்தன. | தேவையான உப விதிகள் ஆக்கப்பட வேண்டும். | வாகனத் தரிப்பிடத்திற்கான உப விதிகள் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அங்கீகாரத்திற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| தயாரிக்கப்பட்ட உப விதிக்கமைய, சபை நிறைவேற்ற வேண்டிய 15 பணிகளின் பொருட்டு வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படவில்லை. | நிறைவேற்றப்பட வேண்டிய சகல பணிகளும் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். | தயாரிக்கப்பட்ட உப விதிகளின் பிரகாரம் எதிர்காலத்தில் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படும். |

**(இ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (i) | கழிவுப்பொருள் அகற்றப்படும் இடத்திற்கு சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்படவில்லை. | சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தைப் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும். | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்பட வேண்டியதில்லை என மத்திய சுற்றாடல் அதிகாரசபை அறிவித்துள்ளது. |
| (ii) | கழிவுப் பொருட்கள் அகற்றப்படும் காணிக்கு முன்னைய ஆண்டில் ரூபா 2,000,000 வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் அது ரூபா 4,468,000 ஆகியது. அதற்கமைய, கழிவுப்பொருட்கள் | கழிவுப்பொருள் அகற்றல் வினைத்திறனுடன் நடைபெற வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| அகற்றப்படும் காணிக்கான தொகை 123.4 சதவீதம் அதிகரித்துள்ளது. இது தொடர்பாக மாற்றீட்டு நடவடிக்கைகளைச் சபை கருத்திற் கொள்ளவில்லை. | | |

**(ஈ) பொதுமக்களின் புகார்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபைக்குக் கிடைத்த 431 புகார்களில் 218 புகார்களுக்கு தீர்வு வழங்கப்படவில்லை. | பொது மக்களது புகார்கள் துரிதமாகத் தீர்வு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பொது மக்களது புகார்களை விரைந்து தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(உ) நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைத்து நிற்கவல்ல இலக்கின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நெடுங்காலத் திட்டம் தயாரிக்கப்படவில்லை. மீளாய்வாண்டிலும் நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி செயற்திட்டம் அமுலாக்கப்படவில்லை. | நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி இலக்கு நிறைவேற்றப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் அந்நடவடிக்கைகள் அமுலாக்கப்படும். |

## 3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கடைகளை நேரடியாகப் பரிசோதித்தல் | | |
| 2018 நவம்பர் 09 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட நேரடிப் பரிசோதனைக்கேற்ப மீரிகம சுமணசார மாவத்தையில் சபையை நோக்கியவாறு தெற்குப் புறத்தே நிர்மாணிக்கப்பட்டுள்ள 17 | சபைக்குரிய சொத்துக்களின் உரித்தும் பாதுகாப்பும் உறுதி செய்யப்படுவதற்கு | அதனை சட்டபூர்வமாக சபை பெறுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அதனையடுத்து |

| | | | |
|---|---|---|---|
| | கடைகளுக்குப் புறம்பாக அக்காணியின் முதலாவது கடை சபையின் அங்கீகாரமின்றி நிர்மாணிக்கப்பட்டதொன்றென அவதானிக்கப்பட்டது. கடைத் தொகுதி முடிவடையும் இடத்திலும் தற்காலிகக் கடை ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. இக்கடைகள் நிர்மாணிக்கப்பட்டுள்ள காணி சபைக்குரிய பிணக்குகள் அற்ற சொத்து என்பதைக் குறிக்கும் ஆவணச் சான்றும் இருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்க வேண்டும். | அங்கீகாரமற்ற கடைகளுக்கு அங்கீகாரத்தை வழங்கி ஆவணங்களையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். கடைத்தொகுதி முடிவடையும் இடத்தே உள்ள கடையை அகற்றுவதற்கு எதிர்கால நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (ஆ) | சபையின் அதிகாரத்துக்குட்பட்ட இடத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஏறக்குறைய 20 கடைகள் சபையினதும் நகர அபிவிருத்தி அதிகார சபையினதும் அங்கீகாரமின்றி குத்தகையாளர்களால் மூலத்திட்ட மாற்றத்துடன் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | சபைக்குரிய சொத்துக்களின் உரித்தும் பாதுகாப்பும் உறுதி செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அங்கீகாரத்துடன் கட்டிடத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டு சட்டபூர்வமாக்கப் படும். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | **பதவியணி வெற்றிடங்களும் மிகையும்**<br>இரு வருவாய் பரிசோதகர் பதவிகள் 2006 மற்றும் 2013 ஆண்டுகள் தொடக்கமும், 02 முன்பள்ளி ஆசிரியர் பதவிகள் 2014 ஆம் ஆண்டு தொடக்கமும், சுகாதாரப் பராமரிப்பாளர் பதவி 2012 ஆம் ஆண்டு தொடக்கமும், 07 வேலைக்களத் தொழிலாளர்கள் பதவி 2017 தொடக்கமுமாக மொத்தத்தில் 20 பதவிகளில் 2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறு வெற்றிடங்கள் நிலவின. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | முன்பள்ளி ஆசிரியர் பதவிகளின் 02 க்குமான வெற்றிடங்கள் எதிர்காலத்தில் திறந்த ஆட்சேர்ப்புக்களுக் கமைய நிரப்பப்படும். சுகாதாரப் பராமரிப்பாளர் பதவிக்கு ஆட்சேர்க்கப்படமாட்டாது. வேலைக்கள தொழிலாளர் பதவி மற்றும் ஏனைய பதவிகளுக்கு திறந்த ஆட்சேர்ப்பு முறையின் மூலம் ஆட்சேர்க்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபையிலிருந்து நீங்கிய 07 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 154,903, வேலை இடமாற்றத்திற்குள்ளான உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 78,500 மற்றும் மரணமடைந்த ஒரு உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 131,200 என அறவிடப்பட வேண்டியிருந்தது. | ஊழியர் கடன் நிலுவையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.4 செயற்பாட்டு வினைத்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சந்தை வளாகத்துக்கு எதிரே 06 கடைகளும் ஒரு மிளகாய் அரைக்கும் ஆலையும் அத்துமீறி அமைக்கப்பட்டிருந்தன. | அத்துமீறிய நிர்மாண வேலைகளைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மனிதாபிமான நோக்கில் சந்தை வளாகத்துக்கு எதிரே வர்த்தகம் புரிவதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | சபைக்குரிய 306 கடைகளில் 115 க்கு மாத்திரமே 2019 மே 31 ஆந் திகதியில் உள்ளவாறு குத்தகை உடன்படிக்கைகள் இருந்தன. வர்த்தகச் சந்தை மற்றும் கடை வாடகை நிலுவை மீதி ரூபா 1,528,050 ஆகவிருந்தது. | குத்தகை உடன்படிக்கையில் கைச்சாத்திடவும் நிலுவையை அறவிடவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏனைய கடைகளது உடன்படிக்கைகளும் கைச்சாத்திடப்படும் வர்த்தகச் சந்தை மற்றும் கடை வாடகையும் தற்போது அறவிடப்பட்டவாறுள்ளன. |
| (இ) | மீரிகம பிரதேச சபைக்குரியதாக 142 பொதுக் காணிகள் இருந்தன. இவற்றுக்கு வேலி அமைத்து எல்லைகளை நிர்ணயிப்பதற்குச் சபை நடவடிக்கை எடுக்கவில்லை. | பொதுக் காணிகளது உரித்துடன் பாதுகாப்பும் உறுதி செய்யப்பட வேண்டும். | எல்லை நிர்ணயிக்கப்பட்டு, வேலி அமைக்கப்பட்டு உரித்து உறுதி செய்யப்படும். |

### 3.5 சொத்து முகாமைத்துவம்

#### 3.5.1 சொத்துக்களது பாதுகாப்பை உறுதி செய்யாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிலையான சொத்துப் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 2,085,182 பெறுமதியான 21 காணிகளுக்கும் கட்டிடங்களுக்கும் உரித்துறுதியைப் பெறுவதற்கோ அல்லது அவற்றைச் சுவீகரிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கவில்லை. | காணிகளதும் கட்டிடங்களதும் உரித்தை உரித்துறுதிகள் மூலம் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இருபத்தொரு காணிகளதும் கட்டிடங்களும் உரித்து பிரகடன உரித்துறுதி மூலம் பெறப்படும். |

#### 3.5.2 சொத்துக்களிலிருந்து பெற வேண்டிய வருவாயைப் பெறாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பல்லேவெல வாரச்சந்தை 2014 மே 13 முதல் 2018 ஒக்டோபர் 28 வரை 04 ஆண்டுகளாக மூடப்பட்டிருந்தது. | வாரச் சந்தையை நடாத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2018 நவம்பர் தொடக்கம் இந்த நாள் வரை வாரச் சந்தை சிறப்பாக நடைபெறுகின்றது. |

#### 3.5.3 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பல்லேவெல பழைய ஆயுர்வேத கட்டிடம் அமைந்துள்ள காணி மற்றும் தலஹேன முன்பள்ளி அமைந்துள்ள காணி என்பவற்றைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சொத்துக்களைச் சபை சுவீகரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இக்காணியை பிரதேச சபை சுவீகரிப்பதற்கான கோரிக்கை பிரதேச செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனினும், இதுவரை எமக்கு வழங்கப்படவில்லை. |

### 3.5.4 வருடாந்த பொருட்கள் / கையிருப்புக் கணிப்பு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நூலகப் பொருட் கணிப்புச் சபை அறிக்கையின் பிரகாரம் தொலைந்துபோன ரூபா 15,063 பெறுமதியான 81 புத்தகங்களும் பயன்படுத்தப்பட முடியாது. அகற்றப்பட வேண்டிய ரூபா 41,185 பெறுமதியான 338 கடிதங்களும் சம்பந்தமாக மேற்கொண்டும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பொறுப்பானர்வர்களிடம் பணத்தை அறவிடவும் அகற்றப்பட வேண்டிய புத்தகங்களை அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறித்த புத்தகங்களுக்கான பணம் உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்படுமென்றும் அகற்றப்பட வேண்டிய புத்தகங்கள் எதிர்காலத்தில் அகற்றப்படுமெனவும் அறிவிக்கின்றோம். |

### 3.5.5 வாகனப் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைக்குரிய ரூபா 4,999,500 பெறுமதியான பெக்கோ லோடர் இயந்திரம் 2014 ஏப்ரல் 20 முதல் செயற்படாதிருந்தது. இது பழுதுபார்த்து பயன்படுத்தப்படாது பிரதேச சபை வளாகத்திலிருந்தது. | பழுதுபார்த்துப் பயன்படுத்தப்பட வேண்டும். | உள்ளுராட்சி ஆணையாளருக்கு அறிவித்து ஏலத்தில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |